முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 772**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**09.11.2021**, செவ்வாய்கிழமை

1. அறமெனும் சக்தி கொண்ட வள்ளலே
ஆறுமுகன் எந்தன் ஞானவடிவான அண்ணலே
பெருமைபட உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
புகலுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் அரங்கன் தர்மத்தால்
அகிலமே பெருமாற்றம் காணும்
வாசிவென்ற ஞானிகள்படை அரங்கனுக்கு
வலம்வந்து காப்புதருதல் காண
3. காணவே உலக மக்களுக்கு
கட்டாயம் அழியாமை என்கின்ற ஞானம்
ஞானமாக தீட்சையாக அரங்கன் வழி
நல் உபதேசமாக வந்தடைந்து இனிதே
4. இனிதே இந்த உலகம் பேரற்புதத்தை
இணையில்லா மகா சக்தியாக
கருணைகொண்டு அரங்கன் தயவாலே
கலியுகத்தார் யாவரும் அடைந்து
5. அடைந்துமே அரங்கன் தேடல் வழி
அகிலத்தார் ஞானிகளாக ஆற்றல்கூடி
வரமென உலகமெங்கிலும் வல்லமைபட
அரங்கன் படைகள் பெருகி
6. பெருகியே கலியுகம் ஞானயுகமாகும் பிசகில்லாத ஞான ஆட்சி
பேருலகமெங்கும் மலர்ந்து மலர்ந்துமே ஆறுமுகன் என் தலைமையிலான
நாட்டிடுவேன் ஞானவான்கள் சேவை பெருகி கலியுகம் பேரிடர்களையெல்லாம் வென்று
கந்தவேலன் என் சூட்சுமஞான பூமியாக மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–